# பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - A

2020-09-13

**இன்றைய வாசகங்கள்:**

சீராக் ஞானநூலிலிருந்து வாசகம்: சிஞா.27:30-28:1-9,
திருப்பாடல் 103: 1-2, 3-4, 9-10, 11-12,
திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 14:7-9,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 18:21-35

## திருப்பலி முன்னுரை:

ஆண்டின் பொதுக்காலம் 24 ஆம் வாரத்தில் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் இறைமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்று வாழ்க, இறையருள் பெருக என மகிழ்வோடு வாழ்த்துகிறேன்.

இந்தநாளில் நம் செயல்பாடுகளின் காரணமாக பல வேளைகளில் அறியாமையினால், பலவித நெறுக்கடிகள், சில வேளைகளில் சுற்றுச் சூழல்களின் காரணமாக நாம் செய்துவிடும் தவறுகளினால் இறைவனிடம் மன்னிப்புப் பெறவேண்டிய தேவை நமக்கு உருவாகிறது. தவறு செய்வது மனித இயல்பு. மன்னிக்கும் மாண்பு இறைஇயல்பு. மாந்தரும் தங்களுக்கு எதிராக தவறிழைத்தவர்களை மன்னித்து மாண்புறவேண்டும். இறைவனிடம் மன்னிப்புப் பெற விளையும் மாந்தர், அவரிடமிருந்து அம்மன்னிப்பைப் பெற எத்தகைய தகுதிநிலையில் இருக்கவேண்டும் என்று இன்றைய வழிபாடு, இறைவாக்குகள், மன்றாட்டுகள், மூலமாக நம்மை நல்வழிப்படுத்துகிறது. மன்னிப்பது இறைஇயல்பு என உணர்ந்து மன்னிப்பில் மாண்புறுவோம். எல்லாவற்றுக்கும் முதலும் முடிவுமான இயேசுவை நம் மையமாகக்கொண்டு எல்லாம் அவருக்காக என்றும், அவரது மதிப்பீடே சரியான வாழ்வுமுறை என்று உணர்ந்து வாழ்வோம். இத்தகைய உயர்ந்த எண்ணங்கள் தான் சிறந்த வாழ்வு . அதை வாழ்ந்து காட்டுவதுதான் வழிபாடு. நம் வழிபாடுதான் சிறந்த வாழ்வு என்ற உணர்வுகளுடன் திருப்பலியில் பங்கேற்போம். ஆமென்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது இரக்கத்தின் கருவிகளாக செயல்பட்டு, மக்களிடையே பிறரன்பு செயல்களைத் தூண்டிஎழுப்புபவர்களாகத் திகழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
உலகில் பசி, நோய், வறுமை, அடக்குமுறை போன்றவற்றால் துயருறும் மக்கள் அனைவரும், உமது அன்பின் அரவணைப்பில் புதிய விடியலைக் காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**இறைஞ்சுவோருக்கு இரங்கிடும் எம் இறைவா!**
எங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்களை நாம் மன்னித்து உம்மிடமிருந்து அதே மன்னிப்பையும், இரக்கத்தையும் பரிசாக பெற அருள்புரிய வேணடுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**துன்பத்தில் நல்தேற்றுதல் தரும் எம் இறைவா,**
இந்த தொற்றுநோய் காலத்தில் எங்கள் அருகிலிருக்கும் ஏழைகள், துன்புறுவோர், கைவிடப்பட்டோர், தனிமையில் வாழ்வோருக்கு நாங்கள் உதவிடவும் அவர்களின் பொருளாதாரத் தேவைகளைச் சந்திக்கவும், இரக்கமுள்ள நல்ல இதயத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மாசின்மையின் ஊற்றாகிய எம் இறைவா,**
எம் குழந்தைகள், இளமையில் அதிகமாக உம்மைத் தேடவும், உம் வார்த்தைகளை வாழ்வாக்கி, தம் சொல்லாலும், செயலாலும் திருஅவைக்கும், மனிதகுலச் சமுதாயத்திற்கும் சான்று பகரும் வாழ்வு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**பேரின்பப் பரம்பொருளே! எம் இறைவா!**
எம் குடும்பங்களில் உள்ள அனைவரும்,
தயவுசெய்து, நன்றி, மன்னிக்கவும்...
மிக எளிதாகத் தோன்றும் இந்த மூன்று வார்த்தைகளையும், ஒப்புக்காக, செயற்கையாகச் சொல்லாமல், அவ்வார்த்தைகளுக்குத் தேவையான உண்மையான அர்த்ததோடும், அன்பான மனநிலையோடு கூறி எங்கள் குடும்ப உறவுகளை மேன்மை படுத்தித் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.